# நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை
# ஆண்டறிக்கை - 2012

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, மற்றும் பொதுவசதிகள் அமைச்சு

# உள்ளடக்கம்


| உள்ளடக்கம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 83 |
| 2. | நோக்கு | 84 |
| 3. | செயற்பணி | 85 |
| 4. | தவிசாளர் உள்ளிட்ட பணிப்பாளர் சபை | 86 |
| 5. | பிரதான அலுவலர் சபை | 87 |
| 6. | 2012 ஒழுங்கமைப்பு | 88 |
| 7. | தவிசாளரின் மீளாய்வு | 89 - 90 |
| 8. | அமுல்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் - 2012 | 91 - 109 |
| 9. | நிதிக் கூற்றுக்கள் | |
| | 9.1. ஐந்தொகை | |
| | 9.2. வருமான செலவினக் கணக்கு | |
| | 9.3. பரீட்சை மீதி | |
| 10. | கணக்காய்வு அறிக்கை | 110 - 121 |
| 10.1 | பணிப்பாளர் சபை அறிக்கை | 122 - I |
| 10.2 | கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 122 - II |

# அறிமுகம்

**நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை**

**நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையானது 2008ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அதிகார சபை சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டது.**

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையை தாபிப்பதன் அடிப்படை நோக்கமாக இருப்பது நகரக் குடியிருப்பு அபிவிருத்தி சம்பந்தமான தேசிய கொள்கையை தயார்செய்தல், நிலையான நகரக் குடியிருப்பு அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக குறைந்த வசதிகளைக் கொண்ட நகரக் குடியிருப்புகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துதல் மற்றும் அந்த மக்களுக்கு ஆகக்குறைந்த நகர்ப்புற வசதிகளுக்கான அணுகுமுறைகளை ஏற்படுத்திக்கொடுத்து தற்போது காணப்படுகின்ற வீட்டு அலகுகளை மேம்படுத்துவது அல்லது மிகவும் நல்லதொரு வீடமைப்பு வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை தயார்செய்து அமுல்படுத்துவதாகும்.

# நோக்கு

**நிலையான நகரக் குடியிருப்புகளில் உயர் தரம்மிக்க வாழ்க்கை முறையை உறுதிசெய்தல்.**



# செயற்பணி

நிலையான நகர அபிவிருத்தி திட்டத்திற்கு அமைவாக குறைந்த வசதிகளைக் கொண்ட நகரக்குடியிருப்புகள் மற்றும் நகர்ப்புற பிராந்திய மக்களின் வீடமைப்பு சிக்கலுக்கு தீர்வு வழங்குதல் மற்றும் அதற்குச் சமாந்தரமாக அவர்களை சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியாக வலுவூட்டுதல்

# 2012

2012.01.01 முதல் 2012.12.31ஆந் திகதி வரையான பணிப்பாளர் சபை

| தொ. இல. | பதவி | பெயர் | நியமனம் பெற்ற திகதி |
|---|---|---|---|
| 01. | தவிசாளர் | சட்டத்தரணி பாலித கமகே | 2010.05.24 |
| 02. | பணிப்பாளர் நாயகம் (பணிப்பாளர் சபை செயலாளர்) | டாக்டர் சுமித் வன்னிஆரச்சி | 2010.05.26 |
| 03. | பணிப்பாளர் சபை உறுப்பினர் | சங்கைக்குரிய இத்தகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் | 2010.05.24 |
| 04. | பணிப்பாளர் சபை திரு. உறுப்பினர் | டப்ளியூ.எம்.பி.ஜி. விக்ரமசிங்க | 2012.01.05 |
| 05. | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. நிமல் பெரேரா | 2012.01.05 |
| 06. | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. ஏ.டப்ளியூ. தயானந்த | 2010.07.07 |
| 07. | பணிப்பாளர் சபை உறுப்பினர் | செல்வி எம்.ஐ.வி. அமரசேகர | 2010.07.28 |
| 08. | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. பேனார்ட் காரியவசம் | 2010.05.24 |
| 09. | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. ரனில் பிரியந்த பிரனாந்து | 2010.05.24 |
| 10. | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. ஏ.எச். சுரே' இந்திக | 2010.05.24 |
| 11. | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. சமிந்த குமார சுதர்சிங்க | 2010.05.24 |
| 12. | பணிப்பாளர் சபை உறுப்பினர் | திரு. அஜித் கித்சிறி பண்டார | 2010.05.24 |


# 2012

2012.01.01ஆந் திகதி முதல் 2012.12.31ஆந் திகதி வரையான பிரதான அலுவலர் சபை

| தொ. இல. | பதவி | பெயர் | நியமனம் பெற்ற திகதி |
|---|---|---|---|
| 01. | பணிப்பாளர் நாயகம் | டாக்டர் திரு. சுமித் வன்னிஆரச்சி | 2010.05.26 |
| 02. | பணிப்பாளர் (சமூக திரட்டல்) | திரு. வை.ஆர். த சில்வா | 2011.11.01 |
| 03. | பணிப்பாளர் (நிதி)(பதில்) | திரு. என்.பி.பி. டயஸ் | 2011.02.01 |
| 04. | பணிப்பாளர் திட்டமிடல் | திரு. எம்.டி.கே. சந்தரசேன | 2011.02.01 |
| 05. | சிரே‘ட பொறியியலாளர் (பதில்) | திரு. ஜீ.ஜே. குணசேகர | 2011.11.01 |
| 06. | உள்ளக கணக்காய்வாளர் | திரு. எல்.ஆர்.ஏ. ‘ரந்த | 2011.02.01 |
| 07. | உதவிப் பணிப்பாளர் (சட்டம்) | திருமதி. டி.ஏ. தேவிகா திசாநாயக்க | 2011.11.01 |
| 08. | உதவிப் பணிப்பாளர் (சமூக திரட்டல்) | செல்வி பி.எஸ். கமகே | 2011.11.01 |
| 09. | உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்) | திருமதி கே.ஏ.டப்ளியூ.ரி.பி.டி. சில்வா | 2011.11.01 |
| 10. | உதவிப் பணிப்பாளர் (வளங்கள்) | திரு. டப்ளியூ.எம்.எல். பொதேஜு | 2012.04.03 |
| 11. | உதவிப் பணிப்பாளர் (நிதி) | திரு. ஏ.எம்.கே. பண்டார அதாவுத | 2012.06.11 |
| 12. | உதவிப் பணிப்பாளர் (கட்டட கலைஞர்) | திருமதி எம்.எஸ்.வி. விபுலகுன | 2012.08.08 |
| 13. | நிர்வாக அலுவலர் | திரு. ஏ. ஆர். பி. ஞானப்பிரிய | 2012.03.22 |

# நிறுவனக் கட்டமைப்பு

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை யுருவுர்முசுஜவுலு



# தவிசாளரின் மீளாய்வு

2012ஆம் ஆண்டு நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வருகின்ற நான்காவது ஆண்டாகும்.

இந்த ஆண்டில் ஜனசெவன மற்றும் சஹஸ்ர லங்கா வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைய மொரட்டுவை நகர்ப்பிரதேசத்தில் கடலரிப்பினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறுகின்ற நகர்ப்புறச் சமூகத்தினருக்காக அமுல்படுத்தப்பட்ட 288 வீடுகளைக் கொண்ட தொடர்மாடி வீடமைப்புத் திட்டத்தின் 2ஆம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த வீடமைப்புக் கருத்திட்டத்தின் முதல் கட்டத்தின் நிர்மாணப்பணிகள் 82மூ பூர்த்தி செய்யப்பட்டதுடன் 2ஆம் கட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட நிர்மாணப் பணிகளில் 42மூ வேலைகளைப் பூர்த்தி செய்ய முடிந்தது.

மொரட்டுவை நகர வலயத்தின் சமூகத்தை இலக்காகக் கொண்டு லுனாவ பிரதேசத்தில் 356 வீடுகளைக் கொண்ட தொடர்மாடி வீடமைப்புத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டதுடன் அந்த கருத்திட்டத்தின் நிர்மாணப்பணிகள் சுமார் 10மூ பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புற வலயத்தில் காணப்படுகின்ற தற்காலிக மற்றும் பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளை பூரணமான வீடுகளாக மாற்றியமைப்பதற்காக நகர திரிய வீடமைப்புக் கருத்திட்டம் இந்த ஆண்டில் புதியதொரு நிகழ்ச்சித ் திட்டமாக ஆரம்பிக்கப்பட்டது. இதன்கீழ் முதல் கட்டத்தின் 252 பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்த முடிந்தது.

அநுராதபுரம் நகர வலயத்தில் வெள்ளம் மற்றும் வேறு இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்படுகின்ற குடும்பங்களை இலக்காகக் கொண்டு தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட 108 வீடுகளை கொண்ட "துருஇதுருகம" வீடமைப்புக் கருத்திட்டத்தின் நிர்மாணப்பணிகளை பூர்த்தி செய்வதற்கும் இந்த ஆண்டில் முடிந்தது.

குறைந்த வசதிகளைக் கொண்ட நகர குடியிருப்பு வாசிகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள "ஜனசெவன சுயசக்தி" மனித அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் கொழும்பு வலயத்தின் வடகொழும்பு, மத்திய கொழும்பு, கிழக்கு மற்றும் மேற்கு கொழும்பு மற்றும் பொரளை என்ற வகையில் நான்கு வலயங்களில் பரந்தளவில் இந்த ஆண்டில் அமுல்படுத்த முடிந்தது. சுயசக்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு நகர்ப்புற குடியிருப்புகள் 88ஐச் சேர்ந்த 12621 குடும்பங்கள் சம்பந்தப்பட்டுள்ளதுடன் சமுதாய அடிப்படையிலான அமைப்புகள் 71ஐ வலுவூட்டவும் முடிந்துள்ளது. மேலும் குடியிருப்புகளில் உள்ள சிறுவர்கள் 4546 பேரை சம்பந்தப்படுத்திக் கொண்டு இலங்கை தேசிய சேமிப்பு வங்கியுடன் இணைந்து 2136 சிறுவர் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பிக்கவும் முடிந்தது.

சிறிய அளவிலான சுயதொழில் முயற்சியாளர்களாக உள்ள நகர்ப்புற குடியிருப்புகளில் வசிக்கும் பெண்களை ஊக்குவிப்பதற்காக சிறியளவிலான தொழில்முயற்சிகளில் ஈடுபட்டுள்ள பெண்கள் 142 பேருக்கு கடன் உதவிகள் வழங்கப்பட்டது.

நகரக் குடியிருப்புகளில் உள்ள சமூகத்தினரின் சுகாதார மற்றும் போஷாக்கு நிலைமையை மேம்படுத்துவதற்காக வளதாரர் நிறுவனங்களை தொடர்புகொண்டு அது சம்பந்தமான சுமார் 2000 குடும்பங்களை அறிவுறுத்துவதற்கும் குடியிருப்புகளில் வாழும் சமூகத்தின் அடிப்படை சுகாதார மற்றும் துப்பரவேட்பாட்டு வசதிகளை மேம்படுத்துவதற்காக சமுதாய பங்கேற்பு ஒப்பந்த முறையியலை பயன்படுத்தி 22 சமுதாயக் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு அந்த கருத்திட்டங்களில் 65% இன் வேலைகளை நிறைவுசெய்து மக்களிடம் கையளிப்பதற்கும் இந்த ஆண்டில் முடிந்துள்ளது.

2012 உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு கொழும்பு நகரத்தில் உள்ள நகர குடியிருப்புகளை மையமாகக் கொண்டு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டதுடன் இந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கு குறைந்த வசதிகளைக் கொண்ட நகர்ப்புற குடியிருப்புகளின் சிறுவர்கள் சுமார் 3500 பேர் ஆக்கபூர்வமாக பங்களிப்புச் செய்ததுடன் இந்தக் குடியிருப்புகளைச் சேர்ந்த பெண்கள் மற்றும் இளைஞர்கள் 3000 பேருக்கு "ஜனசெவன சுயசக்தி" மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் செயல்ரீதியாக பங்கேற்கும் வாய்ப்பும் கிடைத்தது. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்படி மக்கள் மத்தியில் கருத்து ரீதியான மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கும் தற்போது காணப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிய புரிந்துணர்வையும் நம்பிக்கையையும் கட்டியெழுப்புவதற்கும் காரணமாக உள்ளன.

அதற்கமைய இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதும் புதிய நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிக்க முடிந்துள்ளமையும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். எவ்வாறாயினும் இந்த அதிகாரசபைக்கு ஆரம்ப மூலதனத்தை கட்டியெழுப்பிக்கொள்ள முடியாமை பாரியதொரு குறைபாடாக உள்ளதை சுட்டிக்காட்ட முடியும்.

**சட்டத்தரணி பாலித காமகே**
தவிசாளர்
நகரக் குடியிருப்பு அதிகார சபை

# அமுல்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் - 2012

2012ஆம் ஆண்டில் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள 04 அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

1. “ஜனசெவன சகஸ்ர லங்கா” நகர வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம்
    - 1.1. அங்குலான தொடர்மாடி வீடமைப்புக் கருத்திட்டம்
    - 1.2. லுனாவ தொடர்மாடி வீடமைப்புக் கருத்திட்டம்
2. “ஜனசெவன திரிய” நகர வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்
3. “ஜனசெவன சுயசக்தி” மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
4. தேசத்துக்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

## 1. “ஜனசெவன சகஸ்ர லங்கா” நகர வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு தேசிய அபிவிருத்திக் கொள்கைகளுக்கு அமைய வீடுகள் இல்லாத சகலருக்கும் வீடொன்றின் உரிமையை பெற்றுக் கொடுப்பதற்காக அரசாங்கத்தின் பூரண தலையீட்டுடன் ஜனசெவன தேசிய வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி நடவடிக்கை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு உள்ளிட்ட நாட்டின் நகர்ப்புறங்களில் குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளில் வாழும் மக்களுக்கு முறையான வீடமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஜனசெவன சகஸ்ர லங்கா நகர வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

இந்த அணுகுமுறையின் ஊடாக குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளின் மக்களுக்கு வசதிகள்மிக்க வீட்டு அலகொன்றின் உரிமையை பெற்றுக்கொடுப்பதுடன் முடியுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் பெறுமதிமிக்க நகர்ப்புற காணிகளை மீள்அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளுக்காக விடுவிக்கவும் செயற்படுகின்றது. இதன்கீழ் மொரட்டுவை நகர வலயத்தில் வீடமைப்பு அபிவிருத்தி திட்டங்கள் இரண்டு ஆரம்பிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளன.

## 1.1. மொரட்டுவை அங்குலான தொடர்மாடி வீடமைப்புக் கருத்திட்டம் (கட்டம் ஐ மற்றும் ஐஐ)

மொரட்டுவை நகர வலயத்தில் அங்குலான கடலரிப்புக்கு உட்படுகின்ற கரையோரப்பகுதியில் வாழும் வறிய மக்களை இலக்காகக் கொண்டு அங்குலான தொடர்மாடி வீடமைப்புத்திட்ம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த தொடர்மாடி வீடமைப்புத்திட்டத்தில் 288 வீட்டு அலகுகள் நிர்மாணிக்கப்படுவதுடன் ஒரு வீட்டு அலகின் அளவு 531 சதுர அடிகளாகும்.





ஒரு வீட்டு அலகு உணவு உட்கொள்ளும் அறையுடனான ஹோல் மற்றும் இரண்டு படுக்கை அறைகள், சமையலறை, பெல்கனி, மலசலகூடம் மற்றும் குளியலறை போன்றவைகளும் உள்ளடக்கியுள்ளது. ஏனைய பொது வசதிகளும் இவற்றுக்கு பெற்றுக்கொடுக்கப்படும்.

இரண்டாம் கட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இந்தக்கருத்திட்டத்தின் நிர்மாணப்பணிகள் நிறைவடைந்து வருவதுடன் 2013ஆம் ஆண்டு டிசெம்பர் மாத இறுதியில் இது பூர்த்தி செய்யப்படவுள்ளது. கருத்திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள மொத்த செலவினம் 920 மில்லியன் ரூபாவாகும்.



## 1.2. லுனாவ தொடர்மாடி வீடமைப்புக் கருத்திட்டம்

குறைந்த வசதிகளைக் கொண்ட நகர்ப்புர சமூகத்தை இலக்காகக் கொண்டு மொரட்டுவை லுனாவ நகர வீடமைப்புக் கருத்திட்டம் 2012 ஜூன் மாதம் 28ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இது 356 வீட்டு அலகுகளைக் கொண்ட தொடர்மாடி வீடமைப்புத் திட்டமாகும். இந்த வீடமைப்புக் கருத்திட்டத்திற்கு மதிப்பிடப்பட்ட செலவினம் 875 மில்லியன் ரூபாவாகும் (வட் இன்றி)





இந்த தொடர்மாடி வீடொன்றின் அளவு 456 சதுர அடிகளாகும் என்பதுடன் ஒரு வீட்டு அலகில் ஹோல் உடனான உணவு அறை, இரண்டு படுக்கையறைகள், சமையலறை, பெல்கனி, மலசலகூடம் மற்றும் குளியலறைகள் ஆகியவைகள் உள்ளடங்குகின்றன. ஏனைய பொது வசதிகளும் செய்துகொடுக்கப்படும்.

இந்த கருத்திட்டம் 2012ஆம் ஆண்டில் 10%மான பௌதீக முன்னேற்றத்தை அடைந்திருந்தது.





## 2. “ஜனசெவன திரிய” நகர வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

நகர வலயங்களில் காணப்படுகின்ற தற்காலிக மற்றும் பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளை தரமான வீடுகளாக மாற்றியமைப்பதற்காக வங்கி நிதி கட்டமைப்புகளில் இருந்து வீடமைப்புக்கடன் அல்லது நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாத வறிய சமுதாயத்தினரின் வீட்டுப்பிரச்சினைக்கு பங்கேற்பு முறையியலின் அடிப்படையில் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன் இந்த நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்காக குறைந்த வசதிகளைக் கொண்ட பயனாளிகளை இனங்காண்பது வலயத்தில் உள்ள கிராம சேவகர் அலுவலர் மற்றும் பிரதேச செயலாளர் ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன் பயனாளியுடன் நேர்முகக் கலந்துரையாடல் ஒன்றை நடாத்தி பயனாளியின் வீட்டை நிர்மாணிக்க வேண்டியதன் அவசியத்தன்மை மற்றும் பங்களிப்பையும் கவனத்தில் கொண்டு வீடுகளை திட்டமிடுவது மேற்கொள்ளப்படும். வீடுகளை நிர்மாணிக்கத் தேவையான நிதி வசதிகள் மற்றும் திருப்பிச் செலுத்தும் காலஎல்லை பயனாளியுடன் கலந்துரையாடி தீர்மானிக்கப்படும். பயனாளியுடன் சென்று அவரின் வீட்டை அபிவிருத்தி செய்து கொள்வதற்கு தேவையான தொழில்நுட்ப, நிதிசார் உதவிகளைப் பெற்றுக்கொடுப்பது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் விசேட அம்சமாகும்.

இந்த நிகழ்ச்சித்திட்டம் முன்னோடிக்கருத்திட்டம் ஒன்றாக 2012ஆம் ஆண்டில் கடுவளை நகர வலயத்தில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் 252 பேரை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது கடனை திருப்பிச் செலுத்தும் காலஎல்லை 10 வருடம் வரையிலும் உச்ச கடன் தொகையாக ரூபா 300,000 வழங்கப்படுகின்றது.

வீட்டுத்திட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவிகள் பயனாளிகளிடம் சென்று எமது தொழில்நுட்ப அலுவலர்களினால் பெற்றுக்கொடுக்கப்படுகின்றது.









பயனாளிகளை அறிவுறுத்தல்





பயனாளிகள் வீடுகளை நிர்மாணித்துள்ள முறை









## 3. “ஜனசெவன சுயசக்தி” மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தினால் நகர குடியிருப்பு சமுதாயத்திற்கு வீடுகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு மேலதிகமாக அந்த மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு தேவையான நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகம் செய்தல் மற்றும் அமுல்படுத்த வேண்டியதன் பொறுப்பும் இந்த அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த நகரக் குடியிருப்பு வாசிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக “ஜனசெவன சுயசக்தி” மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2011ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் இதன்கீழ் நகரக் குடியிருப்புவாசிகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.
சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள்

### 1. சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் பற்றி சமுதாயத்தை அறிவுறுத்தல்

சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமாக பரந்தளவில் அறிவுறுத்தல், சுயசக்தி குடும்பங்களை பதிவு செய்தல் மற்றும் அதற்கான தகவல்களை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் புதிய குடியிருப்புகளில் தொடர்ச்சியாக 2012ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதுடன் இதன்போது சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் பற்றி குடியிருப்புகளில் உள்ள சமூகத்தினரை அறிவுறுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதற்கமைய 2012ஆம் ஆண்டில் கொழும்பு நகரத்தின் 4 வலயங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் 88 குடியிருப்புகளைச் சோந்த 12621 குடும்பங்கள் இந்த நிகழ்ச்சித்திட்டம் பற்றி அறிவுறுத்தப்பட்டுள்ளன.

### 2. சமுதாய அடிப்படையிலான அமைப்புகளை வலுவூட்டல்

சுயசக்தி குடியிருப்புகளுக்குச் சென்று பலமுடன் சமுதாய அடிப்படையிலான அமைப்புகள் மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் இந்த நிகழ்ச்சித் திட்டத்துடன் சம்பந்தப்படுத்திக்கொள்ளல் மற்றும் சமுதாய அடிப்படையிலான அமைப்புகள் செயலிழந்துள்ள குடியிருப்புகளில் சுயசக்தி சமுதாய அபிவிருத்தி சங்கங்களை கட்டியெழுப்புவதன் மூலம் பலம்மிக்க சமுதாய அடிப்படையிலான அமைப்புகள் கட்டமைப்பொன்றை குடியிருப்புகளில் தாபிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கமைய 2012ஆம் ஆண்டில் புதிதாக 71 சமுதாய அமைப்புகளை சம்பந்தப்படுத்திக்கொண்டு கொழும்பு நகரத்தில் சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்த முடிந்துள்ளது.





## 3. சிறிய குழுக்களாக மக்களை ஒழுங்குபடுத்தல்



நகர குடியிருப்புகளின் சமுதாயத்தை சிறிய குழுக்களாக திரட்டி கூட்டு சக்தியை கட்டியெழுப்புவதில் உள்ள முக்கியத்துவம் பற்றி குடியிருப்புகளின் சமுதாயத்தை அறிவுறுத்தல் குழுக்களாக ஒன்றிணைந்து செயற்படுவதற்குத் தேவையான வழிகாட்டல்கள் மற்றும் அதற்குத் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்வது இதன்மூலம் இடம்பெறுகின்றது.

சேமிப்பு மற்றும் சிறிய அளவிலான நிதிக்கடன் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதும் இதன்மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

## 4. சிறுவர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

நகரக் குடியிருப்புகக்ளின் சிறுவர்களது அறிவையும் ஆற்றல்களையும் கருத்துக்களையும் வளர்க்கும் நோக்கத்துடன் சுயசக்தி சிறுவர் கழகங்களை கட்டியெழுப்பி சிறுவர் நிகழ்ச்சித்திட்டங்களை குடியிருப்புகளில் அமுல்படுத்தல் மற்றும் பல்வேறு சிறுவர்களுக்கான போட்டிகள் அழகியல் கலைத்திறன்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள், மரம் நடுகை நிகழ்ச்சித்திட்டங்கள், சேமிப்பு மற்றும் சமய நிகழ்ச்சித்திட்டங்கள், சிறுவர் நூலகங்களை ஆரம்பித்து குடியிருப்புகளில் உள்ள சிறுவர்களை அனைத்து துறைகளிலும் அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

2012ஆம் ஆண்டில் நகரக் குடியிருப்புகளில் உள்ள சிறுவர்களுக்காக தாபிக்கப்பட்ட சிறுவர் கழகங்களின் எண்ணிக்கை 63 ஆகும். சுயசக்தி சிறுவர் கழக நிகழ்ச்சித்திட்டம் பற்றி கொழும்பு நகரில் 4 வலயங்களையும் உள்ளடக்கும் வகையில் சிறுவர்கள் 2410 பேர் அறிவுறுத்தப்பட்டு சுயசக்தி சிறுவர் நிகழ்ச்சித்திட்டத்துடன் அவர்களை தொடர்புபடுத்திக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.









## 5. சிறுவர் சேமிப்பு நிகழ்ச்சித்திட்டம்

இந்த குடியிருப்புகளில் உள்ள சமூகத்தினர் நாட்டில் காணப்படுகின்ற வங்கி அமைப்புகளில் இருந்து தூரமாகி இருப்பதானால் அவர்கள் மத்தியில் சேமிப்பு பழக்கமின்மை அவர்களை பொருளாதார ரீதியாக கட்டியெழுப்புவதில் தாக்கம் செலுத்துகின்ற பாரிய சிக்கலொன்றாக இனங்காணப்பட்டுள்ளது. இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்வதை கட்டாயமாக செய்ய வேண்டுமென நாம் இனங்கண்டிருப்பதுடன் சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்துவதற்காக நிகழ்ச்சித்திட்டம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டது. முதியவர்கள் மற்றும் சிறுவர்களுக்கான சேமிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் இதன்கீழ் தனித்தனியாக அமுல்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை சேமிப்ப வங்கியுடன் இணைந்து 2012ஆம் ஆண்டில் 1136 சிறுவர் சேமிப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கமைய முதியோருக்கான சேமிப்பு நிகழ்ச்சித்திட்டமும் அமுல்படுத்தப்பட்டது.







## 6. நகர்ப்புற விவசாயக் கருத்திட்டம்

நகர்ப்புற குடியிருப்புக்களில் உள்ள சிறிய இடவசதிகள் மற்றும் காணிப்பகுதிகளைப் பயன்படுத்தி விவசாயத்துறையில் ஈடுபடுவதற்குத் தேவையான அறிவையும் உதவியையும் பெற்றுக்கொடுப்பதன் மூலம் அவர்களின் அன்றாட செலவினங்களை குறைப்பதற்கும் நல்லதொரு சூழலை ஏற்படுத்துவதற்கும் வீட்டில் இருந்து அன்றாடம் வெளியேற்றப்படுகின்ற கழிவுப்பொருட்களை பயன்மிக்கவாறு பயன்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதை நோக்காகக் கொண்டு நகர்ப்புற விவசாய நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

மேல்மாகாண விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து கொழும்பு நகரின் 4 வலயங்களையும் பிரதிநிதித்துவம் செய்கின்றவாறு 2ஆம் கட்டத்தின் கீழ் 14 குடியிருப்புகளில் நகர்ப்புற விவசாயம் பற்றி குடியிருப்பு மட்டத்தில் அறிவுறுத்தி அந்த விவசாய நிகழ்ச்சித்திட்டத்திற்கு சிறுவர் கழகங்கள் முதியோர் போன்றவர்களையும் இணைத்துக்கொண்டு அதனை அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.





## 7. திண்மக்கழிவுப்பொருள் முகாமைத்துவம் பற்றி அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம்



நகர்ப்புற சூழலில் கடும் சிக்கலொன்றாக காணப்படுகின்ற திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் பற்றி இந்தக் குடியிருப்புகளில் வசிப்பவர்களின் பங்கேற்புடன் உள்;ராட்சி மன்றங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் பங்கேற்புடன் ஆரம்பிக்கப்பட்டிருப்பது இந்த சிக்கலைத் தீர்த்துக் கொள்வதற்காக சமுதாயத்தின் பங்களிப்பை உச்சளவில் பெற்றுக்கொள்வதற்கான அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டமாகவாகும்.

அதற்கமைய மேல்மாகாண திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபையுடன் இணைந்து கூட்டான அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டுள்ளது.

## 8. போதையற்ற ஒரு நகரம் - போதை வஸ்து நிவாரண நிகழ்ச்சித்திட்டம்



மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கிற்கு அமைய போதையற்ற சமூகம் ஒன்றை உருவாக்குவதும் நாட்டுக்கு தேவையான ஆரோக்கியமிக்க மக்களை உருவாக்குவதும் நாட்டின் சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு பெரிதும் பயனுள்ளதாக அமையும். குறிப்பாக நகர்ப்புற குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளில் உள்ள சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை இந்த போதைவஸ்துக்களில் இருந்து விடுவித்துக்கொள்ள தேவையான போதைவஸ்து நிவாரண நிகழ்ச்சித்திட்டங்கள் அரச நிறுவனங்கள் தொண்டர் அமைப்புகளுடன் இணைந்து அமுல்படுத்த ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விசேடமாக இந்த நிகழ்ச்சித்திட்டம் புகையிலை மற்றும் மதுபானம் பற்றிய தேசிய அதிகாரசபையுடன் இணைந்து 2011ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அபாயகரமான ஔடதக்கட்டுப்பாட்டு தேசிய சபை, கொழும்பு மாநகரசபை மற்றும் இலங்கை சமுர்த்தி அதிகாரசபை போன்ற நிறுவனங்களும் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு பங்களிப்பு வழங்கியுள்ளன. இந்த ஆண்டிலும் நகர குடியிருப்புகளை மையமாகக் கொண்டு அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் 58ஐ ஒழுங்கு செய்து அதன்மூலம் சமுதாயத்தை அறிவுறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## 9. தொழில்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்



நகரக் குடியிருப்புகளில் உள்ள தொழிலற்ற இளைஞர்களை இனங்கண்டு வெளிக்களங்களில் தொழில்சார் பயிற்சிகளில் ஈடுபடுத்துவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். நகர்ப்புற தொழிலின்மைக்குத் தீர்வாக 2012ஆம் ஆண்டில் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

## 10. சேமிப்பு மற்றும் நுண்நிதிக்கடன் நிகழ்ச்சித்திட்டம்

நகர்ப்புற குடியிருப்பு மட்டங்களில் தற்போது சிறியளவான சுயதொழில் வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள பயனாளிகள் தொடர்பில் ஆரம்ப ஆய்வொன்று நடாத்தப்பட்டது. கொழும்பு நகரத்தின் 4 வலயங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் அவ்வாறான பயனாளிகளை இனங்கண்டு அவர்கள் பற்றிய அடிப்படை சாத்திக்கூறு ஆராய்ச்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இதன்போது விசேடமாக குடியிருப்பு மட்டத்தில் உணவு உற்பத்தி சிறு தொழில்முயற்சிகள், வேறு சேவைகள் சிறியளவிலான உற்பத்திகளை மேம்படுத்திக்கொள்ளத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் முறையான பயிற்சிகளை பெற்றுக்கொள்ளத் தேவையான உதவிகளை பெற்றுத்தருமாறு அந்தப் பயனாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



அதிகாரசபையின் தலையீட்டுடன் மேற்படி பயனாளிகளை குழுக்களாக வகைப்படுத்தி சேமிப்பு பழக்கத்திற்கு அவர்களை முதலில் ஈடுபடுத்தி அவர்கள் தற்போது பேணிவருகின்ற சுயதொழில் வாய்ப்புகளை வலுவூட்டத் தேவையான அறிவைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் தொழிலை மேம்படுத்திக் கொள்ளத் தேவையான கடன் வசதிகள் பற்றிய ஆரம்ப தகவல்களும் பெற்றுக்கொள்ளப்பட்டன. சிறியளவிலான ஆகக்குறைந்தது ரூபா 5000 முதல் உச்சளவாக ரூபா 15000 வரை சிறிய தொழில் முயற்சிகளை மேம்படுத்திக் கொள்வதற்காக பயனாளிகள் 142 பேருக்கு கடன் வசதிகளும் இந்த ஆண்டில் பெற்றுக்கொடுக்கப்பட்டன.



இந்த நுண்நிதிக் கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கடனை மீளச்செலுத்தும் காலம் ஒரு வருடமாகும். வட்டி விகிதம் 9மூ ஆகும்.

## 11. சமுதாய சுகாதார மற்றும் சாய்சாலை (கிளினிக்) நிகழ்ச்சித்திட்டம்

சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நகர்ப்புற குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளில் இனங்காணப்பட்டுள்ள மற்றொரு முக்கிய சிக்கலாக இருப்பது சுகாதார மற்றும் துப்பரவேற்பாடு தொடர்பில் குடியிருப்பு சமூகத்தவர் மத்தியில் போதியளவு அறிவின்மையாகும். இந்தக் குடியிருப்புகளில் உள்ள சிறுவர்கள் மற்றும் முதியோர்களும் இளைஞர்களும் சுகாதாரம், போசாக்கு துப்பரவேற்பாடு தொடர்பான அறிவை குறைந்த மட்டத்திலேயே கொண்டுள்ளனர். சமுதாயத்தின் கோரிக்கையின் அடிப்படையில் சமுதாய சுகாதார நிகழ்ச்சித்திட்டங்கள், சமுதாய சுகாதார சாய்சாலைகள் (கிளினிக்) மற்றும் அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் வளவாளர் நிறுவனங்களின் உதவியுடன் அமுல்படுத்தப்பட்டன.



**சிறுவர் மற்றும் தாய்மாருக்கான சாய்சாலை (கிளினிக்)**

**நகர்ப்புறக் குடியிருப்பு சமுதாயத்துக்கான கண் சிகிச்சை முகாம்**





**நகர்ப்புறக் குடியிருப்பு சிறுவர்களுக்கான பற்சிகிச்சை முகாம்**





**நகரக் குடியிருப்பு சமுதாயத்திற்கான ஆயுர்வேத சிகிச்சை நிலையம்**





## 12. ஜனசெவன சமுதாய பங்கேற்புடனான சுற்றாடல் மற்றும் துப்பரவேற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

நகர்ப்புறக் குடியிருப்புகளை மையமாகக் கொண்டு அத்தியாவசியமாக அபிவிருத்தி செய்ய வேண்டிய பொது வசதிகளை அபிவிருத்தி செய்து கொடுப்பது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். இந்த சமுதாயத்திற்காக முறையான வீடமைப்பு வசதிகளை பெற்றுக்கொடுக்கும் வரை இந்த குடியிருப்புகளில் பொதுவாகக் காணப்படுகின்ற மலசலகூட வசதிகள், மலசல கழிவகற்றும் கட்டமைப்பு, சமுதாய மண்டபம், விளையாட்டு ஓய்வறை, நூலகங்களை அபிவிருத்தி செய்வது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்கீழ் 22 கருத்திட்டங்கள் 2012ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டன.

**மேலே குறிப்பிடப்பட்ட புனரமைக்கப்பட்ட சமுதாயக் கருத்திட்டங்கள் சில பின்வருமாறாகும்.**

**கோதமிபுர சமுதாய மண்டபம் - ராஜகிரிய**







**புனித அந்தோனியார் சிங்கள மகாவித்தியாலயம் - மட்டக்குளி**

மழைக்கான பாதுகாப்புக் கூரைகளை நிர்மாணித்தல்





T20ஆம் இலக்க தோட்டத்தின சமுதாய மண்டபம் - பொரளை





கதிரானவத்தை சமுதாய மண்டபம் - மட்டக்குளிய





## உலக குடியிருப்பு தின நிகழ்வு - 2012

1. உலக குடியிருப்பு தினத்தை கொண்டாடுவதானது நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தினால் இந்த அதிகாரசபைக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

2. அதற்கமைய உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு அதிகர சபையின் தலையீட்டுடன் மாற்றமடையும் நகரத்திற்கு சந்தர்ப்பம் அளிப்போம் என்பதை தலைப்பாக கொண்டு நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு 2012 செப்டெம்பர் 24 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதிவரை குடியிருப்பு வார கொண்டாட்ட நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது. இந்த வாரத்தின் நிகழ்ச்சித்திட்டத்துக்கு அமைய எமது அதிகாரசபையினால் பின்வரும் நாட்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

   **i.** 2012 செப்டம்பர் 24ஆந் திகதி சமுதாய பங்களிப்புடனான சுற்றாடல் தினம்
   **ii.** 2012 செப்டெம்பர் 26ஆந் திகதி குடியிருப்பு அபிவிருத்திக்கு சமுதாய தலைமைத்துவம்
   **iii.** 2012 செப்டெம்பர் 29ஆந் திகதி எதிர்கால பாதுகாப்புக்கான சேமிப்பை மேம்படுத்துவதும் கலையாற்றல்களை மேம்படுத்துவதும்
   **iv.** 2012 செப்டெம்பர் 30ஆந் திதி விளையாட்டுத்திறமைகளை மேம்படுத்தல்

- **2012 செப்டெம்பர் 24ஆந் திகதி சமுதாய பங்களிப்புடனான சுற்றாடல் தினம்**

"சுகாதாரம் மற்றும் துப்பரவேட்பாட்டின் ஊடாக் மக்களின் வாழ்க்கையை பாதுகாப்போம்" எனும் தொனிப்பொருளிளல் "ஜனசெவன சுயசக்தி" மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துக்கு அமைய நகரக் குடியிருப்புகளில் உள்ள புனரமைக்கப்பட வேண்டிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொது வசதிகளை அபிவிருத்தி செய்வது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

2012 உவக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறைந்த வசதிகளைக் கொண்ட நகர்ப்புறக் குடியிருப்புகளில் உள்ள பாலர் பாடசாலைகள், சமுதாய மண்டபங்கள், வடிகாலமைப்புகளை புதுப்புத்தில் போன்ற கருத்திட்டங்கள் சமுதாயத்தின் ஊடாக இனங்காணப்பட்டு எமது அதிகார சபை மற்றும் வேறு நிறுவனங்களுடன் இணைந்து 22 கருத்திட்டங்களாக கொழும்பு நகரத்தில் நகரக்குடியிருப்பு மட்டத்தில் அமுல்படுத்தப்பட்டதுடன் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மறுசீரமைக்கப்பட்ட ஸ்ரீவிக்ரமபுர விளையாட்டு மைதானம் மற்றும் சமூக மண்டபம் 2012 செப்டெம்பர் 24ஆந் திகதி வைபவ ரீதியாக திறந்துவைக்கப்பட்டன.





- **2012 செப்டெம்பர் 26ஆந் திகதி குடியிருப்பு அபிவிருத்திக்கு சமுதாயத் தலைமைத்துவம்**

"நகர நல்லாட்சிக்கு சமுதாயத்தை வலுவூட்டுவோம்" என்ற தொனிப்பொருளின் கீழ் இந்த நாள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் நகரக் குடியிருப்புகளில் வாழும் சமுதாயக்குழுக்களுக்கு இதுவரை தீர்வு கிடைக்காதுள்ள பொருளாதார, சமூக, கலாசார மற்றும் சுற்றாடல் சிக்கல்களுக்கு அரசாங்க நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் ஊடாக தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கு சமுதாயத் தலைவர்களை வழிநடாத்துவது மற்றும் வழிகாட்டுவது இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

ஜனசெவன சுயசக்தி மனித அபிவிருததி நிகழ்ச்சித்திட்டம் நகரக் குடியிருப்புக்களுக்கு சென்று இந்த சிக்கல்களை ஓரளவு புரிந்து கொண்டுள்ளதுடன் இந்த சிக்கல்களை இனங்காண்பதற்கும் அவற்றைத் தீர்த்து வைப்பதற்குமாக சமுதாயத் தலைவர்களை வழிநடாத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்களை நாம் பெற்றுக்கொடுத்துள்ளோம்.

கொழும்பு நகரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 200 குடியிருப்புகளில் இவ்வாறான சமுதாயத் தலைவசர்கள் இனங்காணப்பட்டு அவர்களின் கருத்துக்களையும் யோசனைகளையும் கவனத்தில் கொண்டு அவர்களின் சமுதாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறான சமுதாய தலைவர்களை பாராட்டுதல் மற்றும் எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி கலந்துரையாடுதல் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்வதற்காக 1000 சமுதாய தலைவர்களின் பங்கேற்புடன் பாராட்டு நிகழ்ச்சித்திட்டம் ஒன்று 2012 செப்டெம்பர் மாதம் 26ஆந் திகதி ஜோன் டி சில்வா மண்டபத்தில் நநடைபெற்றது.





- **2012 செப்டெம்பர் 29ஆந் திகதி எதிர்கால பாதுகாப்புக்கான சேமிப்பை மேம்படுத்துவதும் கலை ஆற்றல்களை மேம்படுத்துவதும்**

நகர்ப்புற குடியிருப்புகளில் உள்ள சிறுவர் சிறுமியர்களின் எதிர்கால பாதுகாப்புக்காக அவர்களை மென்மேலும் சேமிப்புக்கு ஊக்குவிப்பதை நோக்ககாக் கொண்டு "சுயசக்தி"மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை முன்னிட்டு சிறுவர் சிறுமியர்களுக்கான சேமிப்பு ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. கொழும்பு நகரத்தில் உள்ள 200 குடியிருப்புகளைச் சேர்ந்த சிறுவர் சிறுமியர்களை இல்காகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டதுடன் 2012 உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு இதற்காக 1000 சிறுவர் சிறுமியர்களை இலக்காக்க கொண்ட சேமிப்பு நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்டது.

இலங்கை சேமிப்பு வங்கியின் அனுசரணையின் கீழ் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அமுல்படுத்திய இந்த நகர்ப்புற சிறுவர்களுக்கான சேமிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 29012 செப்டெம்பர் மாதம் 29ஆந் திகதி விகாரமஹாதேவி திறந்தவெளி மண்டபத்தில் 1000 சிறுவர் சேமிப்புகளை கணக்குகளை ஆரம்பித்துவைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

- **நகர குடியிருப்பு சிறுவர்களின் சிறுவர் சித்திர கண்காட்சி**

நகர குடியிருப்புகளில் உள்ள சிறுவர்களின் ஆக்கபூர்வமான ஆற்றல்கள் மற்றும் கலைத்திறமைகளை வளர்க்கும் நோக்கத்துடன் குடியிருப்புகளில் உள்ள சிறுவர்கள் 5000 பேரை ஒன்றுதிரட்டி 3 வயது தொகுதிகளின் கீழ் சிறுவர்களுக்கான சித்திரப்போட்டியொன்று உலக குடியிருப்பு தினத்தின் தொனிப்பொருளை மையமாகக் கொண்டு நடாத்தப்பட்டது.

முதலாவது சுற்றுக்கு தோற்றிய சிறுவர்களில் இருந்து வெற்றிகரமான 1000 ஆக்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நேரடியாக சித்திரங்களை வரைவதற்காக 2012 செப்டெம்பர் மாதம் 22ஆந் திகதி விகாரமஹாதேவி பூங்காவில் ஒரு நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததுடன் இதன்போது சித்திர ஆக்கங்களை கண்காட்சிக்காக சமர்ப்பிப்பதற்கு 2012 செப்டெம்பர் மாதம் 22ஆந் திகதி கொழும்பு கலாபவனத்திலும் ஒரு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வயது தொகுதிகளுக்கு அமைய சிறுவர்களின் சித்திரப் போட்டியில் வெற்றிபெற்ற சிறுவர்களுக்கு பரிசுகள், சான்றிதழ்கள் மற்றும் விருதுகளும் பணப்பரிசுகளும் வழங்கப்பட்டதுடன் இந்த நிகழ்வு கொழும்பு மாநகர சபை மைதானத்தில் உலக குடியிருப்புதின தேசிய வைபவத்தை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையிலான நிகழ்வின்போது இடம்பெற்றது.





- **நகர குடியிருப்புகளில் உள்ள சிறுவர்களின் திறன்களை வளர்ப்பதற்கான சிறுவர்களுக்கான குறுநாடகப்போட்டி**

  நகர்ப்புற குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளில் உள்ள சிறுவர்களின் ஆக்கபூர்வமான ஆற்றல்களை வளர்ப்பதறங்காக 2012 உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு சிறுவர் நாடகப்போட்டியொன்றை எமது அதிகாரசபை ஒழுங்கு செய்திருந்தது. இந்த நாடகப்போட்டியில் கொழும்பு நகரப்புற பிரதேசத்தை உள்ளடக்கும் வரையில் 57 நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன.

  நாடகத்துறையின் பிரபல நிபுணர்களைக் கொண்ட நடுவர் குழுவொன்றின் கீழ் 15 நாடகங்கள் 2ஆம் சுற்றுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் அந்த நாடகங்களில் இருந்து மிகவும் சிறந்த ஆக்கத்தை தெரிந்து எடுப்பதற்கான நோக்கத்துடன் விசேட நாடக செயலமர்வொன்றும் ஒழுங்குசெய்யப்பட்டது.

  இரண்டாம் சுற்றுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நாடகங்களின் பங்கேற்புடன் இந்த நாடக விழா 2012 செப்டெம்பர் மாதம் 22ஆந் திகதி கொழும்பு-07 கிறீன்பாத் புதிய நகரமண்டபத்தில் நடைபெற்றது. இந்த நாடக விழாவின்போது வெற்றிபெற்ற நாடகங்கள் மற்றும் சிறந்த கலைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் இதில் வெற்றிபெற்றமைக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் ஒக்டோபர் மாதம் 1ஆந் திகதி இடம்பெற்ற உலக குடியிருப்புதின தேசிய வைபவத்தின்போது வழங்கிவைக்கப்பட்டன. அதற்கு மேலதிகமாக முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட நாடகம் குடியிருப்புதின வைபவத்தின்போது அரங்கேற்றப்பட்டது.






- **நகர்ப்புறக் குடியிருப்புகளில் உள்ள சிறுவர்களின் திறமைகளை வளர்ப்பதற்கனா சிறுவர் கட்டுரைப்போட்டி**

  2012 உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு பாடசாலை சிறுவர் சிறுமியர்களின் வீடமைப்பு மற்றும் குடியிருப்பு மயாமாக்கல் பற்றிய அறிவையும் புரிந்துணர்வையும் வளர்க்கும் நோக்கத்துடன் நகர்ப்புறக் குடியிருப்புகளை மையமாகக் கொண்ட பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியொன்று ஒழுங்குசெய்யப்பட்டது.

  இந்தப் போட்டியில் சுமார் 600 ஆக்கங்கள் முன்வைக்கப்பட்டதுடன் 3 வயது தொகுதிகளின் கீழ் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகள், சான்றிதழ்கள் மற்றும் பணப்பரிசுகளும் உலக குடியிருப்புதின தேசிய நிகழ்வின்போது வழங்கிவைக்கப்பட்டன.





- **2012 செப்டெம்பர் 19ஆந் திகதி விளையாட்டு திறமைகளை மேம்படுத்தல் - அணிக்கு 6 பேர் கொண்ட கிரிகெட் சுற்றுப்போட்டி**

கொழும்பு நகரத்தின் குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளில் உள்ள சிறுவர் சிறுமியர்கள் மற்றும் இளைஞர் யுவதிகளின் விளையாட்டு திறமைகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் மற்றும் 2012 உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அணிக்கு 6 பேர் கொண்ட திறந்த ஆண் மற்றும் பெண்களுக்கான கிரிகெட் சுற்றுப்போட்டியொன்றினை ஒழுங்குசெய்திருந்தது.

இந்த சுற்றுப்போட்டியின் ஆரம்ப சுற்றில் கொழும்பு நகரத்தை பிரதிநிதித்துவம் செய்து 127 அணிகள் போட்டியிட்டதுடன் இதில் 1000க்கும் அதிகமான வீர வீராங்கனைகள் பங்கேற்றனர். இந்தப் போட்டியின் கால் இறுதிப்போட்டிக்கு 20 அணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் அந்தப் போட்டிகள் 2012 செப்டெம்பர் மாதம் 19ஆந் திகதி கொழும்பு பேஸ்லைன் புகையிரத திணைக்கள மைதானத்தில் நடைபெற்றன.

இந்தப் போட்டிகளின் ஊடாக இறுதிப்போட்டிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகள் 2012 செப்டெம்பர் மாதம் 24ஆந் திகதி மட்டக்குளிய ஸ்ரீவிக்ரமபுர நவீனமயப்படுத்தப்பட்ட விளையாட்டு மைதானம் திறந்துவைகக்ப்பட்ட சந்தர்ப்பத்தில் போட்டியிட்டதுடன் இதில் வெற்றிபெற்ற அணிகளுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வு ஒக்டோபர் மாதம் 1ஆந் திகதி கொண்டாடப்பட்ட உலக குடியிருப்புதின வைபவத்தின்போது இடம்பெற்றது.






- **2012 செப்டெம்பர் மாதம் 30ஆந் திகதி வியைளயாட்டுத் திறமைகளை மேம்பாடுதத்ல் - மரதன் போட்டி**

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் குறைந்த வசதிகளைக் கொண்ட நகர குடியிருப்புகளில் உள்ள முதியோர் இளைஞர்கள் யுவதிகள் மற்றும் சிறுவர் சிறுமியர்களின் பங்கேற்புடன் குடியிருப்புதின மரதன் போட்டியொன்று ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

18 வயதுக்கு குறைவான மற்றும் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் என இரண்டு தொகுதிகளின் கீழ் ஒழுங்குசெய்யப்பட்ட இந்த போட்டிகளுக்கு 500க்கும் அதிகமான விண்ணப்பங்கள் முன்வைக்கப்பட்டிருந்ததுடன் இந்த போட்டி செப்டெம்பர் 30ஆந் திகதி முப. 9.00 மணிக்கு கொழும்பு விகாரமஹாதேவி பூங்காவிற்கு அருகில் ஆரம்பிக்கப்பட்டு நெலும்பொக்குன கலாசார நிலையத்திற்கு அருகாமையில் முடிவடைந்தது.

பங்கேற்ற சகல போடடியாளர்களுக்கும் சான்றிதழ்கள வழங்கப்பட்டதுடன் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இதனை வழங்கிவைக்கும் நிகழ்வு ஒக்டோபர் மாதம் 01ஆந் திகதி உலக குடியிருப்புதின வைபவத்தின்போது இடம்பெற்றது.





# 4. தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

### அநுராதபுரம் "துருஇத்துருகம" வீடமைப்புக் கருத்திட்டம்

அநுராதபுரம் தேசத்துக்கு மகுடம் தேசிய அபிவிருத்தி கண்காட்சியை முன்னிட்டு 2011ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் கட்டுகளியாவ பசுமைக் குடியிருப்புக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த கருத்திட்டத்தின்போது பாரம்பரிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி 102 வீடுகளும் சுற்றாடல் மற்றும் வலுசக்திக்கு சாதகமான களிமண் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 6 வீடுகளும் உள்ளடங்கியதாக 108 வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் 2012ஆம் ஆண்டில் 95 வீடுகளின் நிர்மாணப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன இதற்கென செலவிடப்பட்ட மொத்த தொகை 74.50 மில்லியன் ரூபாவாகும்.



நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை
2012 - டிசம்பர் 31ம் திகதியில் உள்ளவாறான ஐந்தொகை

| 2011 | | குறிப்பு | | | |
|---|---|---|---|---|---|
| | **சொத்துக்கள்** | | | | |
| | **நிலையான சொத்துக்கள்** | | | | |
| 858,377.54 | மரத்தளபாடமும் பொருத்தியும் | | 1,553,926.26 | 938,562.37 | 615,363.89 |
| 323,903.79 | அலுவலக உபகரணங்கள் | | 796,458.50 | 440,327.41 | 356,131.09 |
| | வாகனங்கள் | | 22,450,000.00 | 3,694,167.00 | 18,755,833.00 |
| 654,440.58 | கணணிகள் | | 4,453,658.60 | 3,219,147.60 | 1,234,511.00 |
| 1,836,721.91 | | | 29,254,043.36 | 8,292,204.38 | 20,961,838.98 |
| 50,193,090.00 | குறைவேலை - அங்குலானை செயற்றிட்டம் | | | 396,064,240.46 | |
| | குறைவேலை - லுனாவை செயற்றிட்டம் | | | 69,912,751.29 | |
| | குறைவேலை - அனுராதபுரம் செயற்றிட்டம் | | | 86,377,355.31 | 552,354,347.06 |
| | **நிர்மாணத்திற்கான முற்பணம்** | | | | |
| 93,681,151.29 | நிர்மாண முற்பணம் | | | | 364,394,354.79 |
| | **வீடமைப்பு விரிவாக்கல் கடன்** | | | | |
| | வீடமைப்பு விரிவாக்கல் கடன் | | | 38,016,847.00 | |
| | கிடைக்க வேண்டிய கடன் தவணைப்பணம் | | | 537,021.18 | |
| | சமூக வலுவூட்டல் கடன் | | | 621,710.00 | 39,175,578.18 |
| | **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| 98,860.00 | முற்பணங்கள் | | | 289,645.00 | |
| 39,619,234.06 | காசு மற்றும் வங்கி மீதிகள் | | | 6,530,716.06 | |
| 11,416,004.11 | சேமிப்பு கணக்குகள் | | | 47,314,955.55 | |
| 11,482,369.04 | 7 நாட்கள் அழைப்பு வைப்புக்கள் | | | | |
| 13,103,674.00 | ரீல் நிறுவனம் | | | 13,103,674.00 | 67,238,990.61 |
| 147,474.00 | கிடைக்க வேண்டிய வட்டி | | | | |
| **221,578,578.41** | **மொத்த சொத்துக்கள்** | | | | **1,044,125,109.62** |
| | **உரிமைகளும் பொறுப்புக்களும்** | | | | |
| **5,000,000,000.00** | அனுமதிக்கப்பட்ட மூலதனம் | | | | **5,000,000,000.00** |
| 228,334,000.00 | திறைசேரி மானியம் | | | 835,184,000.00 | 835,184,000.00 |
| 1,694,234.46 | U.S.I.P சொத்துக்கள் | | | | |
| 21,083,577.69 | **மு.கொ.மீதி (வருமான செலவுக்கணக்கு)** | | | (36,193,155.21) | |
| (57,276,732.90) | மிகை/குறை (வருமான செலவுக்கணக்கு) | | | 11,619,000.08 | (24,574,155.13) |
| 193,835,079.25 | **மொத்த மூலதனம்** | | | | 810,609,844.87 |
| | **நிலையான பொறுப்புக்கள்** | | | | |
| 3,759,834.00 | பணிக்கொடைக்கான ஒதுக்கம் | | | 3,996,885.25 | 3,996,885.25 |
| | **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | |
| 15,329,044.22 | பிடிபணம் | | | 61,389,788.25 | |
| 8,654,620.94 | அட்டுறு செலவு | | | 168,128,591.25 | 229,518,379.50 |
| **221,578,578.41** | **மொத்த உரிமைகளும் பொறுப்புக்களும்** | | | | **1,044,125,109.62** |

இறுதி நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் என்பன குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத்துவச்சபையின் பொறுப்பாகும்.

பணிப்பாளர் நிதி
ந.கு.அ.அ

பணிப்பாளர் நாயகம்
ந.கு.அ.அ

தலைவர்
ந.கு.அ.அ

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை

2012-டிசம்பர்-31ல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிப்பாய்ச்சல் கூற்று

| | | |
|---|---|---|
| மொத்த கிடைப்பனவுகள் | | |
| மீண்டெழும் செலவுகள் (திறைசேரி நிதி) | 53,608,000.00 | |
| அபிவிருத்திகள் | 645,734,000.00 | |
| நிதி வசதிகள் | 3,324,297.70 | 702,666,297.70 |
| நெறிப்படுத்தல் பணிகளின் பொருட்டு | | |
| நிர்வாகச்செலவு | 57,438,713.03 | |
| முற்பணங்கள் | 190,785.00 | 57,629,498.03 |
| முதலீட்டு நடவடிக்கைகள் | | |
| அபிவிருத்திச்செலவுகள் | 538,738,941.04 | |
| கடன் வழங்கல்கள் | 38,206,912.00 | |
| நிலையான சொத்துக்கள் | 2,412,190.60 | |
| நிர்மாண முற்பணங்கள் | 74,352,066.63 | 653,710,110.27 |
| | | (8,673,310.60) |
| ஆரம்ப காசு மற்றும் வங்கி மீதி | | 62,517,607.21 |
| இறுதி காசு மற்றும் வங்கி மீதி 31.12.2012 | | 53,844,296.61 |

இலங்கை கணக்கீட்டு நியமச்சட்டம் 09இற்கமைய நேரடியான முறையில் இந்த நிதிப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை

2012 - டிசம்பர் - 31ம் திகதி முடிவடையும் வருடத்திற்கான வருமான செலவுக்கணக்கு

| 2011 | | | 2012 | |
|---|---|---|---|---|
| 111,764,387.50 | வருமானங்கள் | | 117,913,032.70 | |
| 1,694,234.46 | நீக்கங்கள் (ந.கு.அ.அ) | | 1,694,234.46 | 119,607,267.16 |
| 113,458,621.96 | | | | |
| | | குறிப்பு | | |
| 122,718,180.68 | அபிவிருத்திச்செலவுகள் | 1 | 39,872,062.10 | |
| 46,570,551.05 | நிர்வாகச்செலவுகள் | 2 | 61,725,131.45 | |
| 1,446,623.13 | ஏனைய செலவுகள் | 3 | 6,391,073.53 | 107,988,267.08 |
| (57,276,732.90) | மிகை/குறை வருமானம்/செலவு | | | 11,619,000.08 |
| **(57,276,732.90)** | மிகை/குறை வருமானம்/செலவு | | | **11,619,000.08** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No: எச்/சீ/யுஎஸ்டிஏ/ஏபிசீடிஎப்/13/2012/26
ඔබේ අංකය / உமது இல / Your No.
දිනය / திகதி / Date: 2013 ஒக்டோபர் 27

தலைவர்,
நகர வதிவிட அபிவிருத்தி அதிகாரசபை

**நகர வதிவிட அபிவிருத்தி அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

நகர வதிவிட அபிவிருத்தி அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவுக் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 36 ஆம் இலக்க நகர வதிவிட அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 17(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசிலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கை காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka
දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail: oaggov@sltnet.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

2. நிதிக் கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நகர வதிவிட அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 நிறுவனம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

கீழே தரப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக திறைசேரியின் அல்லது அரசாங்கத்தின் ஏனைய நிதி உதவி இல்லாமல் அதிகாரசபையை நடாத்துவது நிச்சயமற்றதாக உள்ளது.

(அ) 2008 இன் 36 ஆம் இலக்க நகர வதிவிட அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 16(3) ஆம் உப பிரிவில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், அதிகாரசபையின் ஆரம்ப மூலதனம் ரூபா 5,000 மில்லியனாக இருக்க வேண்டியதுடன் அது தவணை அடிப்படையில் அரசாங்கத்தின் திரட்டு நிதியிலிருந்து செலுத்தப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டின் முடிவில் அவ்வாறு மூலதனம் உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்கூறிய அதிகாரச்சட்டத்தின் 16(உ) ஆம் உப பிரிவில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் குறைந்த செலவினத்துடனான வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு பணம் வழங்குவதற்காக ஆதனங்களை அபிவிருத்தி செய்பவர்களிடமிருந்து சேவைக் கட்டணமாக நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் சேகரிக்கப்படும் அனைத்துப் பணமும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டும். எனினும் 2010 திசெம்பர் 14 ஆந் திகதிய 10/2951/504/012 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இச்சேவைக் கட்டணத்தின் அறவீடு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதனால் நகர வதிவிட அபிவிருத்தி அதிகாரசபைக்கு அதன் மூலதன வருமான மார்க்கம் இழக்கப்பட்டிருந்தது.

**2.2.2 ரியல் எஸ்டேட் எக்ஸ்சேன்ஜ் தனியார் கம்பனியைக் கலைத்து சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பொறுப்பேற்றல்**

2007 பெப்ரவரி 22 ஆந் திகதிய அமப/07/0140/226/013 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நகர வதிவிட அபிவிருத்தி அதிகாசபை தோற்றுவிக்கப்பட்ட உடன் ரியல் எஸ்டேட் எக்ஸ்சேன்ஜ் தனியார் கம்பனி கலைக்கப்பட்டு அக்கம்பனியின் சொத்துக்களும் பொறுப்புக்களும் பதவியினரும் அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும் 2013 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரையும் பதவியினரை உள்ளீர்ப்புச் செய்தல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது.

கம்பனி சொத்துக்களை விட பொறுப்புக்கள் அதிகம் என்பதனால் சுயமாகக் கலைத்து மூடிவிட முடியாதுள்ளது என சட்டமா அதிபர் ஆலோசனை தெரிவித்துள்ளதாக தலைவரால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

2012 ஆம் ஆண்டிற்கான ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்புக்கள் முறையே ரூபா 1,862,687 மற்றும் ரூபா 279,418 ஆல் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

சமூக அமைப்புக்களுக்கு செலுத்தவேண்டியிருந்த ரூபா 3,741,000 தொகையைச் செலுத்தாது விடுவதற்கு மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் சபை தீர்மானம் எடுத்திருந்த போதிலும் கணக்குகளில் தேவையான செம்மையாக்கல்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை**

ஒரு சொத்தாக வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 16,450 தொகையான வங்கி மீதி அதிகாரசபையின் சொத்தாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| 1985 இன் 01 ஆம் இலக்க சேமலாப நிதிய (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 09(2) ஆம் பிரிவு | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக 2012 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,862,687 தொகை குறைவாக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. |
| 1993 இன் 18 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 5(1) ஆம் பிரிவு | அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக 2012 ஆம் ஆண்டிற்காக ரூபா 279,418 தொகை குறைவாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. |
| நிதிப்பிரமாணம் இலக்கம் 371(2)(ஆ) | பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒரு பணிக்காக வழங்கக்கூடிய குறித்த பணிக்கான உச்ச அளவு உப கட்டுநிதி ரூபா 20,000 ஆக இருந்த போதிலும் அந்த எல்லையை மிகைத்து 45 சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 22,054,409 கூட்டுமொத்தமான குறித்த பணிக்கான உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 11,619,000 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 57,276,733 ஆக இருந்ததனால் நிதிசார் விளைவுகளில் ரூபா 68,895,733 தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. நிதிசார் விளைவுகள் அதிகரிப்பதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தத காரணங்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான/ செலவு விடயம் | சாதகமான/ (பாதகமான) தாக்கம் |
|---|---|
| | ரூபா |
| திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மானியம் | 4,657,000 |
| ஏனைய வருமானம் | 344,114 |
| வட்டி வருமானம் | 1,147,531 |
| அபிவிருத்திச் செலவுகள் | 82,846,119 |
| நிர்வாகச் செலவுகள் | (15,154,580) |
| ஏனைய செலவுகள் | (4,944,451) |
| | 68,895,733 |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 சச்சரவுத்தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) களிமண் வீடு கட்டும் செயற்திட்டம் ஒன்றில் வேலையாட்களுக்கு சம்பளம் செலுத்துவதற்காக இரண்டு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,416,900 கூட்டுத்தொகையான முற்பணங்கள் அவர்களின் தனிப்பட்ட வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் மதிப்பிடப்பட்ட நாளாந்த சம்பள அளவிற்கு மேலாகவும் வேலையாட்கள் சமூகமளிக்காத நாட்களை சமூகமளித்த நாட்களாகக் கருதியும் ரூபா 150,000 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) "விசிர நிவாச" உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணங்களை பூர்த்திசெய்த நலன்பெறுனர்களை கௌரவிப்பதற்காக பகிர்ந்தளிக்கும் நோக்கில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த எனினும் அந்நோக்கத்திற்கு புறம்பாக நடவடிக்கை எடுத்திருந்த ரூபா 103,320 பெறுமதியான 164 மணிக்கூடுகள் வேறு பல்வேறு தரப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

(இ) பதவியணியை மதிப்பிட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தி அதிகாரசபையின் அனைத்து பதவியணியையும் அமைச்சினதும் அமைச்சின் கீழுள்ள

அனைத்து கூட்டுத்தாபனங்களின் பதவிநிலைத் தரத்திலுள்ள அனைத்து உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கி மொத்தம் 180 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் ஒரு நாள் உபசரிப்புச் செலவுகளுக்காக ரூபா 493,490 தொகை செலவுசெய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உபகாரச் செலவுகளுக்காக அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் முறையான வகையில் நிதி ஏற்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவும் இல்லை.

(ii) உபசாரத்தை நடாத்தும் நோக்கமும் அதில் பங்குபற்றியோரின் வருகைப் பதிவேடு ஆகிய உறுதிப்படுத்தும் சான்றுகள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பட்டியலை அடிப்படையாகக் கொண்டு பணத்தைச் செலுத்துவதற்குப் பதிலாக சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கோரல்களை அடிப்படையாகக் கொண்டு பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் கொடுப்பனவிற்கான பற்றுச்சீட்டுக்களும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உலக வீடமைப்பு தின நிகழ்ச்சித்திட்டத்தின் பிரச்சார நடவடிக்கைகளுக்காக பதாதைகள், ரீசேட், பந்தல்கள் மற்றும் காட்சிப் பலகைகளை வழங்குதல் மற்றும் அலங்காரப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 639,300 தொகை தனியார் பிரச்சாரக் கம்பனிக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) விலை மனுக்கள் முறைப்படியாக ஒப்படைக்கப்பட்டிருக்காததுடன் விலை மனுக்கள் கொள்வனவுக் குழுவின் முன்னிலையில் திறக்கப்பட்டிருக்கவில்லை. அவை இரண்டு நாட்களில் திறக்கப்பட்டிருந்ததுடன் திறந்த உத்தியோகத்தர்களின் கையொப்பங்கள் இடப்பட்டிருக்கவில்லை.

(ii) உரிய பொருட்களை வழங்குதல், அலங்காரப்படுத்தல் நடவடிக்கைகளைச் செய்வதற்காக கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் அப்பொருட்கள் உரிய நியமத்திற்கிணங்க வழங்கப்பட்டுள்ளன எனவும் உரிய பொருத்துதல்கள் முறைப்படியாக இடம்பெற்றுள்ளன எனவும் உறுதிப்படுத்துவதற்காக பொருள் பெறுவனவுகளும் வழங்குதல்களும் தொடர்பாக எழுத்துமூலச் சான்றுகளோ அல்லது உரிய செயற்பாடுகள் தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தர்களின் பரிந்துரைகளும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) பொருத்தப்பட்ட தோரணங்கள், பதாதைகள் முதலியன மீண்டும் களஞ்சியத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 பதவியணியினர் நிர்வாகம்

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து ஆட்சேர்க்கப்பட்டிருந்த மேலதிக ஊழியர்கள் 06 ஆக இருந்ததுடன் பதவியணியினர் பற்றாக்குறை 16 ஆகும். நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு முடியுமாக இருந்த போதிலும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 19 ஆகும்.

4.3 வாகன பயன்பாடு

மீளாய்வாண்டின் போது வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட 06 வாகனங்களுக்காக செலுத்தப்பட்ட மொத்த பணம் ரூபா 7,067,405 ஆகும்.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொருளாதார ரீதியாக மிகவும் இலாபகரமான வழங்குனர்களைத் தெரிவுசெய்வதற்காக கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாகன வழங்குனருடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் 7 ஆம் 8 ஆம் பிரிவுகளில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக 2012 பெப்ரவரி மாதத்தின் போது 05 வாகனங்கள் ஓடிய 17,849 கிலோ மீற்றர் மொத்த தூரத்திற்காக ரூபா 68,893 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) வழங்குனர்களின் வேண்டுகோளின் பேரில் 2012 மார்ச் மாதத்திலிருந்து ஓடுகின்ற ஒவ்வொரு கிலோ மீற்றருக்காகவும் ரூபா 35 வீதம் செலுத்துவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்த போதிலும் அச்சந்தர்ப்பங்களிலும் கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012 திசெம்பர் 07 ஆந் திகதிய 150 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் 8 ஆம் பந்தியிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த ஒரு வாகனத்தை அகற்றும் அடிப்படையில் திறைசேரியிடமிருந்து 2012 பெப்ரவரி மாதத்திலிருந்து வழங்கப்பட்டிருந்த போதிலும் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த எந்த வாகனமும் அகற்றப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக அமைச்சிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனமும் மீள ஒப்படைக்கப்பட்டிருந்தது.

5. கணக்களிப் பொறுப்பம் நல்லாளுகையும்

5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் முன்னேற்றம் முறைப்படி மீளாய்வு செய்யப்படக்கூடிய வகையில் முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 06 செயற்திட்டங்கள் தொடர்பாக 2012 திசெம்பர் 31 வரையும் அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிதி இலக்குகள் ரூபா 1,413,980,000 ஆக இருந்த போதிலும் அத்திகதியில் நிதிச் செயலாற்றல் ரூபா 998,540,000 மாத்திரமாக இருந்ததனால் நிதிச் செயலாற்றலில் பின்னடைவு 30 சதவீதமாக இருந்ததுடன் அதற்குச் சமமான அளவில் பௌதீக முன்னேற்றமும் பின்னடைவிற்கு உள்ளாகியிருந்தது. போதியளவில் கட்டுநிதி கிடைக்காமை இதற்கு காரணமாக இருந்தது.

5.2 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

அதிகாரசபை ஆரம்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரையான ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் 2013 ஒக்டோபர் வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபையின் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) செலவு முகாமைத்துவம்
(இ) மனிதவள முகாமைத்துவம்

டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

## பணிப்பாளர் சபை அறிக்கை

2012.12.31 ஆம் திகதியில் இருந்தவாறான நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் சபை பின்வருமாறாகும்.

திரு பாலித கமகே - சட்டத்தரணி
தவிசாளர்

சங்கைக்குரிய இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ
பணிப்பாளர்

திரு டபிள்யு.எம்.பி.ஜி. விக்ரமசிங்க
பணிப்பாள்

திரு நிமல் பெரேரா
பணிப்பாளர்

திரு ஏ.டபிள்யு. தயாநந்த
பணிப்பாளர்

செல்வி எம்.ஐ.வி. அமரசேகர
பணிப்பாளர்

திரு பர்னாட் காரியவசம்
பணிப்பாளர்

திரு ரனில் பிரியந்த பெர்ணாந்து
பணிப்பாளர்

திரு ஏ.எச். சுரேஷ் இந்திக்க
பணிப்பாளர்

பணிப்பாளர்

திரு அஜித் கித்சிறி பண்டார
பணிப்பாளர்

மீளாய்வு ஆண்டில் பணிப்பாளர் சபையின் 12 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் துணைக் குழுவாக இயங்கி வருகின்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் 04 கூட்டங்கள் 2012 ஆம் ஆண்டு நடாத்தப்பட்டது

பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களான பின்வரும் பணிப்பாளர்கள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அங்கத்தவர்களாகவும் செயற்படுகின்றனர்.

செல்வி எம்.ஐ.வி. அமரசேகர - தவிசாளர்
திரு பர்னாட் காரியவசம்
திரு ரனில் பிரியந்த பெர்ணாந்து
திரு ஏ.எச். சுரேஷ் இந்திக்க
திரு சமிந்த குமார சுதசிங்க

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் குறைந்த வசதிகளைக் கொண்டுள்ள நகரக் குடியிருப்புக்களில் வசிக்கின்ற மக்களுக்கு வீடமைப்புத் தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படுவதுடன், நகரப் பிரதேசங்களில் அமைந்துள்ள வாழ்வதற்குப் பொருத்தமானதாக இல்லாத வீடுகளை உயர் தரமானதாக மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் நகரக் குடியிருப்புக்களில் வாழும் மக்களின் பொருளாதார, சமூக நிலைமையை அபிவிருத்தி செய்வதற்கான மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் மற்றும் 13.6 ஆம் பிரிவுகளுக்கு அமைய நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற சகல கொடுக்கல் வாங்கங்கள் தொடர்பாகவும் முறையாக கணக்குகளில் பதிவு செய்து கணக்குப் பதிவேடுகளைப் பேணிவருவதை உறுதி செய்கின்ற பொறுப்பு மற்றும் அதிகார சபையின் கணக்கு நடவடிக்கைகள் மற்றும் உரிய ஆண்டுக்கான மிகை அல்லது குறைபாட்டின் உண்மையான மற்றும் நியாயமான கருத்துக்களை வெளிப்படுத்துகின்ற நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யும் பொறுப்பு அதிகார சபையின் பணிப்பாளர் சபைக்கு உள்ளது.

அதற்கமைய, முறையாக கணக்குப் பதிவேடுகளை பேணிவருமாறும், நாளாந்தம் நடாத்தப்பட்டு வருகின்ற கூட்டங்கள் மற்றும் கணக்காய்வுக் குழு ஊடாக நிதி அறிக்கையிடல் முறையியலை மீளாய்வு செய்யுமாறு பணிப்பாளர் சபை அதிகார சபைக்கு கட்டளையிட்டுள்ளது.

இந்த ஆவணத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யும் போது, ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் ஏற்புடையவாறு முறையான கணக்கீட்டு நியமங்களை ஏற்புடையதாக்கிக் கொள்வதும், நியாயமான மற்றும் முறையான தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகளின் மூலம் உறுதி செய்வது பற்றியும் பணிப்பாளர் சபை கவனம் செலுத்தியுள்ளது.

அதிகார சபைக்கு உரித்தான சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும், மோசடி மற்றும் ஏனைய முறைகேடுகள் பற்றி ஆராய்வதற்கும், அவற்றைத் தடுத்துக் கொள்ளவும் பணிப்பாளர் சபை

அவர்களுக்கு நடைமுறையில் பின்பற்றக்கூடிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. இது தொடர்பாக செயற்படும் போது, பணிப்பாளர் சபை அதிகார சபையின் சொத்துக்களைப் பாதுகாத்துக் கொள்ளல் மற்றும் அதன் அறிக்கைகளின் சரியானதன்மை மற்றும் நம்பகத்தன்மையை நடைமுறையில் முடிந்தளவுக்குப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் சேவைகளை முறையாக நிறைவேற்றத் தேவையான உள்ளப் பரிசோதனைகள், உள்ளகக் கணக்காய்வு மற்றும் நிதிசார், ஏனைய கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ள பயன்மிக்க மற்றும் பூரணமான கட்டுப்பாட்டுக் கட்டமைப்பும் தாபிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைக்கு அமைய,

................................................

வைத்தியர் சுமித் வன்னிஆரச்சி,
பணிப்பாளர் சபையின் செயலாளர்.

நல்லதொரு முகாமைத்துவ அறிக்கையிடல் முறையியல் காணப்படுவதை உறுதி செய்வதற்காக மற்றும் முகாமைத்துவத்திற்கும், ஏனைய அதிகாரிகளுக்கும் சரியான மற்றும் பொருத்தமான, இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களைப் பெற்றுக் கொடுக்கக்கூடியவாறு அதனை நல்லமுறையில் முகாமைத்துவம் செய்வதை உறுதி செய்வதற்கும், சட்டங்கள் மற்றும் அதிகார சபையின் கொள்கைகளுக்கும், நியாயாதிக்க மற்றும் கூட்டிணைக்கப்பட்டுள்ள நிருவாகத்திற்கு இசைவாகவும் கணக்கீடு மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டை முகாமைத்துவம் செய்வதற்கும், மீளாய்வு செய்தல் மற்றும் கண்காணிப்புச் செய்யும் அதிகாரங்கள் கணக்காய்வுக் குழுவுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையிலுள்ள திறைசேரியின் பிரதிநிதி மற்றும் பணிப்பாளர் சபையின் ஏனைய 04 அங்கத்தவர்களை உள்ளடக்கியதாக கணக்காய்வுக் குழு செயற்படுகின்றது. முன்னர் இருந்தே அமுலிலுள்ள நடைமுறைகளுக்கு அமைய, நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் (நிதி) மற்றும் ஏனைய பணிப்பாளர்கள் சிலரும் குழுவின் அங்கத்தவர்களாக செயற்பட்டு வந்துள்ளனர். அரசாங்க தொழில்முயற்சிகள் வழிகாட்டிக்கு அமைய, பணிப்பாளர் சபையிலுள்ள திறைசேரியின் பிரதிநிதியும், உதவிப் பணிப்பாளருமான - அரசாங்க தொழில்முயற்சிகள் - செல்வி எம்.ஜ.வி. அமரசேகர 2012 ஆம் ஆண்டு குழுவின் தவிசாளராக செயற்பட்டார். திரு பர்னாட் காரியவசம், திரு ரனில் பிரியந்த பெர்ணாந்து, திரு ஏ.எஸ். சுரேஷ் இந்திக மற்றும் திரு சமிந்த குமார சுதசிங்க ஆகியோர் குழுவின் ஏனைய அங்கத்தவர்களாக செயற்பட்டு வந்தார்கள். அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர் அவதானிப்பாளராக கணக்காய்வுக் குழுவின் கூட்டங்களில் பங்கேற்றார் என்பதுடன், தேவையானவாறு நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஏனைய அலுவலர்கள் பலரும் இதில் பங்கேற்றுள்ளனர். அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் குழுவின் செயலாளராக செயற்பட்டுள்ளார். உள்ளக் கணக்காய்வாளரினால் தயார் செய்யப்பட்டுள்ள 2012 ஆம் ஆண்டுக்கான விரிவான கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் குழுவினால் ஆராயப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. மீளாய்வு ஆண்டில் இந்தக் குழுவின் 04 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. கணக்காய்வு அறிக்கைகள், கணக்காய்வு வினாக்கள் சம்பந்தமான சிக்கல்கள் மற்றும் பதில்கள், உள்ளக மற்றும் வெளிப்புற கணக்காய்வுகளின் அவதானிப்புக்கள், உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை மற்றும் வருடாந்த அறிக்கைகளை உரிய நேரத்திற்குள் தயார் செய்வதன் அவசியத்தன்மை பற்றி விசேட கவனம் செலுத்துவது உள்ளடங்களாக மேம்படுத்தல்கள் அவசியமான ஏனைய துறைகள் தொடர்பாகவும் குழுக் கூட்டங்களில் ஆராயப்பட்டது. தேவையான சீராக்கல்களைச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், எட்டப்பட்ட தீர்மானங்கள் தொடர்பான பின்னாய்வு நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள்

பணிப்பாளர் சபைக்கும் அறிக்கையிடப்பட்டன.

அங்கத்தவர்கள் மற்றும் அலுவலர்கள் சமர்ப்பித்த பெறுமதிமிக்க பங்களிப்பு மற்றும் குறிப்பாக கணக்காய்வுச் செயற்பாட்டின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்ட முக்கியமான அவதானிப்புக்களையும் நான் மிக்க உயர்வாக மதிக்கின்றேன்.

பணிப்பாளர் சபையின் கட்டளைக்கு அமைய,

.......................................................................

வைத்தியர் சுமித் வன்னிஆரச்சி,
பணிப்பாளர் சபையின் செயலாளர்.